# சிலம்பில் மனிதநேயப் பாத்திரங்கள் – ஓராய்வு

**த. மேகராசா**
கலாநிதிப்பட்ட ஆய்வாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

மலர்: 4

இதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2019

ISSN: 2454-3993

## அறிமுகம்

எக்காலத்திலும் தமிழுக்குப் பெருமை பயக்கும் வாழும் இலக்கியமாகச் சிலப்பதிகாரம் (சிலம்பு) திகழ்கின்றது. அதுவோர் ஆற்றல்மிகு காவியமென்பதற்கு அரசியல், பண்பாட்டுத் தளங்களில் அது ஏற்படுத்தியுள்ள வலுவான தாக்கங்கள் சாட்சியாகவுள்ளன. சிலம்பை மையப்படுத்திய ஆராய்ச்சிகள் இடையறாது முன்னெடுக்கப்படுகின்றன. சிலம்பின் கருவூலத்திற்குள் அரிய பொக்கிசங்கள் நிறைந்து காணப்படுகின்றன. காலத்திற்குக் காலம் ஆய்வாளர்கள் அவற்றை அகழ்ந்தெடுக்கும் தடாகமாக அது விளங்குகின்றது. காலங்கடந்து நின்று வாழ்வுக்கு முன்மாதிரியாக அமைகின்ற இக்காப்பியக்கதை மக்கள் மத்தியில் வலுவாக வேரூன்றிக் காணப்படுகின்றது. இக்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு, கேரளா, ஈழம் உள்ளிட்ட தேசங்களில் கண்ணகி இலக்கியங்கள் பல எழுந்துள்ளமை இதற்குச் சாட்சியாகவுள்ளன. கண்ணகி, கோவலன், மாதவி ஆகியோரின் வாழ்வை எடுத்தியம்பும் இக்காப்பியத்தில் இடம்பெறும் மனிதநேயப் பாத்திரங்கள் பற்றி எடுத்துக்கூறுவதாக இவ்வாய்வு அமைகிறது.

## மனிதநேயப் பாத்திரங்கள்

மனிதரின் பகுத்தறிவை, அறத்தை, ஆற்றலை முன்னிறுத்திய உலகநோக்கு மனிதநேயமாகும். இரக்கத்தால் தூண்டப்படும் இது அனைத்து மனிதர்களையும் மனிதத்தன்மையோடும் மதிப்போடும் நோக்குவதாக அமைகின்றது. சகமனிதரிடம் அன்பு, இரக்கம், பொறுமை, ஆதரவுகாட்டுவதும் வேதனைப்படுத்தாது நல்வழிப்படுத்தி, துயரத்தில் பங்கெடுப்பதுமான நற்பண்புகளை மனிதநேயத்தின் கூறுகளாக அடையாளப்படுத்தலாம். மனிதநேயம் என்பதை சர்வதேச மனிதநேய மற்றும் நெறிமுறை ஒன்றியம் பின்வருமாறு வரையறுக்கிறது:

மனிதநேயம் என்பது ஒரு ஜனநாயக மற்றும் நெறிமுறை வாழ்வாதரமாகும். இது மனிதர்களுக்கு தங்கள் சொந்த வாழ்க்கைக்கு அர்த்தத்தையும் வடிவத்தையும் கொடுக்கும் உரிமையும் பொறுப்பும் உள்ளதென்பதை உறுதிப்படுத்து கின்றது. இது மனித மற்றும் பிற இயற்கை விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட ஒருநெறிமுறையின் மூலம் ஒரு மனிதாபிமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதைக் குறிக்கின்றது. (https://americanhumanist.org/what-is-humanism/definition-of-humanism/)

மேற்கூறிய விளக்கத்திற்கு அமைய மனிதநேயத்தன்மைகொண்டு மனிதாபிமான சமூகத்தை உருவாக்கும் மாந்தர்களையே மனிதநேயப் பாத்திரங்கள் என்று குறிப்பிடலாம். இப்பாத்திரங்கள் மனித சமூதாயத்திற்கு முன் மாதிரியாகத் திகழ்கின்றன. சிலப்பதிகாரத்தில் துணைப் பாத்திரங்களாக வருகின்ற சில பாத்திரங்கள் மனிதநேய மாண்பு வாய்க்கப் பெற்றவையாகப் படைக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் வயந்தமாலை, மாதரி, கவுந்தியடிகள் ஆகிய மூன்று பாத்திரங்கள் அவதானத்திற்குரியவையாகின்றன.

**வயந்தமாலை**

மாதவியின் தோழியாக வயந்தமாலை என்ற மனிதநேயக் குணமுள்ள பாத்திரம் வருகின்றது. மாதவியோடு கூடியின்பங் கண்டிருந்த கோவலன் அவளை விட்டுப்பிரிந்து சென்றபோது மாதவி மிகுந்த துயரால் வாடினாள். பின்னர் கோவலனை மீண்டும் சேர எண்ணி கடிதம் எழுதி, அதனை வயந்தமாலை மூலமே அனுப்புகின்றாள். இங்கு மாதவியின் துயரைப் போக்குவதற்கு கோவலனிடம் தூது செல்கின்றவளாக வயந்தமாலை தொழில்படுவதை அவதானிக்கலாம். கோவலன் தனியாக நிற்கும்போதே கடிதத்தைக் கொடுக்க வேண்டுமென்று மாதவி கூறியதற்கமைய அவ்வாறே சென்று பணிவோடு கடிதத்தைக் கொடுக்கிறாள். கோவலன் வரமறுத்தபோது அவள் வாடிய உள்ளத்தையுடையவளாயினாள். இதனை "வாடிய உள்ளத்து வசந்த மாலை'' (சிலம்பு. வேனிற்காதை: 113) என்ற தொடராற் குறிப்பிடுகின்றார் இளங்கோவடிகள். இது வசந்தமாலையின் உதவி செய்யும் மனப்பாங்கையும் அது நிறைவேறாத போது வருந்துகின்ற குணத்தினையும் எடுத்துக்காட்டுகின்றது. கோவலன் கண்ணகியுடன் மதுரை செல்கையில் கானுறை தெய்வம் வசந்த மாலையின் உருவில் தோன்றி அவனைத் தடுக்க முனைவதையும் சிலப்பதிகாரத்தில் காணலாம்.(சிலம்பு.காடுகாண்காதை:173) இதனடிப்படையில் மாதவிக்குச் சிறந்த தோழியாகவும் அன்புள்ளம் மிக்கவளாகவும் சிலப்பதிகாரத்தில் வயந்தமாலை சித்திரிக்கப்பட்டுள்ளமையினைக் காணலாம்.

**மாதரி**

அடைக்கலக்காதையில் மாதரி என்ற பாத்திரம் அறிமுகப்படுத்தப்படுகின்றது. மாதரி ஆயர் குலப் பெண்ணாகவும் திருமாலை வணங்குகின்றவளாகவும் காட்டப்பட்டுள்ளாள். கவுந்தியடிகளும் கோவலனும் கண்ணகியும் மதுரை சென்றடைந்து அங்குள்ள புறஞ்சேரிப்பகுதியில் தங்கியிருந்தபோ மாதரியைக் கவுந்தியடிகள் காண்கின்றார். தன்னைத் தொழுது நின்ற மாதரியைப் பார்த்துக் கவுந்தியடிகள், இவள் ஆயர் குலத்தைச் சேர்ந்தவளாகத் தெரிகின்றாள் ஆகாத்து ஆப்பயனைப் பிறருக்குக் கொடுக்கும் ஆயரின் வாழ்க்கையில் எந்தக் குற்றச் செயலும் இல்லை. ஆகவே இவள் ஒரு தீமையும் செய்யமாட்டாள் கண்ணகியை இவளிடம் அடைக்கலம் கொடுப்பது மிகப் பொருத்தம் என்று எண்ணினார்.

**"ஆயர் மதுமகண் மாதரியென்போள்**
**கவுந்தியையையைக் கண்டடிதொழலும்**
**ஆகாத் தோம்பியாப்பயனளிக்கும்**
**கோவலர் வாழ்க்கையோர் கொடும் பாடில்லை**
**தீதிலண் முதுமகள் செவ்வியளளியள்**
**மாதரிதன்னுடன் மடந்தையையிருத்துதற்**
**கேதமின்றென வெண்ணினளாகி''**

***(சிலம்பு அடைக்கலக்காதை:118-124)***

கவுந்தியடிகள், மாதரிக்கு இரங்கும் குணமுள்ளதென்று ஊகித்தறிந்து கண்ண கியை அடைக்கலம் கொடுக்கின்றார். அக்கடமையை ஏற்றுக்கொண்டு தன் வீட்டுக்கு கண்ணகியை அழைத்துச் சென்ற மாதரி, தம் இனத்தவர் இருக்கும் தன் வீட்டில் தங்க வைக்காது மரப்பந்தல் நிறைந்த, செம்மண் பூசிப் புதுமைப்படுத்தப்பட்ட, காவல் மிக்க ஒரு சிறிய வீட்டில் இருக்கச் செய்து, புதிய நீரால் குளிக்கப்பண்ணி, என் மகள். ஐயை உனக்கு நல்ல தோழியாக இருப்பாள் கவுந்தி உன்னை நல்ல இடத்தில் சேர்த்ததால் உனக்குக் கவலை இல்லை என்றும் கூறுகின்றாள். பின்னர் உணவு சமைப்பதற்குரிய நல்ல பாத்திரங்களைக் கண்ணகிக்கு உடனடியாகக் கொடுக்கும்படியும் கட்டளையிடுகின்றாள்.

**"அடிசிலாக்குதற் கமைந்தநற் கலங்கள்**
**நெடியாதளி மினீரெனக் கூற''**

***(சிலம்பு, கொலைக்களக்காதை: 20 - 21)***

மேலும், கண்ணகி கோவலனுக்கு உணவு சமைத்துக் கொடுத்து மகிழ்ந்திருந்தமையைக் கண்டு ஐயையுடன் சேர்ந்திருந்து, பார்த்து உள்ளம் மகிழ்கிறாள் (சிலம்பு. கொலைக்களக்காதை: 46-53) இவ்வாறு மாதரி உதவி செய்கின்ற, ஆதரிக்கின்ற மேலான நற்குணங்களுடையவளாகக் காட்டப்படுகிறாள்

**கவுந்தியடிகள்**

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சமண சமய கருத்தியலையும் வலியுறுத்தியுள்ளார் என்பதற்குச் சமணப் பெண் துறவியாகிய கவுந்தியடிகள் பாத்திரம் சான்றாக அமைகின்றது.

அற விழுமியங்களையும் மனித மாண்புகளையும் வலியுறுத்துகின்ற சமண சமயத்தின் அடையாளமாக மனிதநேயப் பாத்திரமாக இக்காப்பியத்தில் கவுந்தியடிகள் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. கோவலன் கண்ணகியுடன் மதுரை செல்கையில் அவ்விருவரையும் கண்டு விசாரித்த கவுந்தியடிகள், இவ்வாறு செல்வது பாதுகாப்பில்லை என்று கூறியபோதும், கோவலன் அதனைக் கேட்காமையால் தானும் மதுரை செல்ல வேண்டியுள்ளதென்றும் ஆகையினால் உங்களுடன் வருகின்றேன் என்றும் கூறிச் செல்கின்றார். மதுரை செல்லும் கண்ணகிக்குப் பாதுகாப்பளிக்கின்ற வகையிலேயே கவுந்தியடிகள் அவ்வாறு தானும் செல்ல வேண்டியுள்ளதென்று கூறினாரெனலாம். இதனூடாக கவுந்திடிகளின் மனிதாய சிந்தை வெளிப்பட்டுள்ளது.

மதுரை செல்லும் வழியில் சோலையொன்றில் கவுந்தியடிகளும், கண்ணகியும், கோவலனும் தங்கியிருந்த போது, அங்கு வந்த இழிமகன் ஒருவனும் பரத்தை ஒருத்தியும் கவுந்தியடிகளிடம் கண்ணகியையும் கோவலனையும் பார்த்து எள்ளி நகையாடியதற்காக அவர்களிருவரையும் நரியாகும்படி செய்தார். பின்னர் கண்ணகியினதும் கோவலனதும் வேண்டுகோளிற்கிணங்க மீண்டும் அவர்களிருவரையும் பழைய உருவத் திற்குக் கொண்டு வருகின்றார். கண்ணகியையும் கோவலனையும் பாதுகாக்கின்றவராக கவுந்தியடிகள் காட்டப்பட்டுள்ளார்.

புறஞ்சிறை மூதூரில் கவுந்தியடிகளையும், கண்ணகியையும் இருக்க வைத்துவிட்டு, தனது துன்பத்தையும் மதுரை நகருக்குள் செல்லும் எண்ணத்தையும் கவுந்தியடிகளிடம் வெளிப்படுத்தியபோது அதனைக் கேட்ட கவுந்தியடிகள் ஆறுதல் வார்த்தைகளைக் கூறி, சென்று வருமாறு அனுப்பி வைக்கிறார்.

அப்பொழுது கவுந்தியடிகள் குறிப்பிடும் பின்வரும் வரிகள் கவனிக்கத்தக்கன

**வல்லாடாயத்து மண்ணர சிழந்து**
**மெல்லியல் தன்னுடன் வெங்கானடைந்தோன்**
**காதலிற் பிரிந்தோனல்லன் காதலி**
**தீதொடுபடூஉஞ் சிறுமையளல்லள்**
**அடவிக் கானகத் தாயிழை தன்னை**
**இடையிருள் யாமத் திட்டு நீக்கியது**
**வல்வினை யன்றோ மடந்தை தன் பிழையெனச்**
**சொல்லலும் உண்டேற் சொல்லாயோ நீ**
**அனையையும் அல்லை ஆயிழை தன்னொடு**
**பிரியா வாழ்க்கை பெற்றனையன்றே**
**வருந்தாதேகி மன்னவன் கூடல்**
**பொருந்துழியறிந்து போதீங் கென்றலும்**
**(சிலம்பு, ஊர்காண் காதை:50 – 61)**

மேலுள்ள பகுதியை நோக்குமிடத்து சிலப்பதிகாரத்தில் வருகின்ற கவுந்தியடிகள் என்ற பாத்திரம் மனிதநேயப் பண்புகளைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளமையைத் தெளிந்துகொள்ளலாம்.

மதுரையை அடைந்ததும் நற்குணங்கள் பொருந்திய மாதரியிடம் கண்ணகியை அடைக்கலங் கொடுப்பதும் கவுந்தியடிகளின் நற்குணத்தினைப் பறைசாற்றுகின்றது. அத்துடன் நன்கு ஆராய்ந்து மிகவும் நிதானமாக கவுந்தியடிகள் கண்ணகியை ஒப்படைக்கின்ற விதம் அவரது அனுபவ முதிர்ச்சியினை எடுத்துக் கூறுவதாக உள்ளது. இவ்விடத்தில் முனைவர் சுந்தரசண்முகனாரின் கூற்று பொருத்தமுடையதாக அமையுமென்று கருதி தரப்படுகின்றது:

**“வழியில் சேர்ந்த கண்ணகியையும் கோவலனையும்**
**காக்கக் கவுந்தி மேற்கொண்ட பொறுப்புள்ள முயற்சி கடமை உணர்வை எவ்வளவு பாராட்டினும் தகும்’’ (1992:268)**

கோவலன் இறந்த செய்தியினை அறிந்து உண்ணாநோன்பு கொண்டு கவுந்தியடிகள் உயிர் துறந்த செய்தியையும் சிலப்பதிகாரம் தருகின்றது. சமணம் துறவறத்தை வலியுறுத்துவது. அதன்படி இப்பாத்திரம் சிலப்பதிகாரத்தில் இடம் பெறுவதுடன் பிறருக்கு நல்வழிகாட்டி, வழிப்படுத்தி, பிறருக்காக நிலையற்ற உடலை விடுகின்ற வகையில் மனிதநேயத்துடன் படைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

## முடிவுரை

இலக்கியங்களில் மனிதவாழ்வுக்கு வழிகாட்டுகின்ற மேன்மைமிக்க பாத்திரங்களும் கருதிதியல்களும் செறிந்து கிடக்கின்றன. நவீனமயமாக்கப்பட்ட இன்றைய சூழலில் இலக்கியங்களின் வழி மனிதன் சிந்திப்பது அரியதாகிவிட்டது. அதனாலேயே மனித விழுமியங்கள் அறுந்ததொரு புதிய சூழலில் சொல்லாண்ணாததும் முன்பொருபோதும் அறிந்திராததுமான கொடுமைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பிறர் மீது நேசம் காட்டுதலென்பது மனிதாயக் கூறாகவுள்ளது. சிலப்பதிகாரம் அக்கால வாழ்வியல், நடைமுறைசார் நெறிமுறைகளைப் பிற்காலச் சமூகத்திற்கு விளக்கிக்காட்டுகின்ற காவியமாகவுள்ளது. வயந்தமாலை, மாதரி, கவுந்தியடிகள் முதலான பாத்திரங்கள் மனிதநேயத் தன்மையுடன் முன்னுதாரண மாந்தர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

## உசாத்துணைகள்

1. சாமிநாதரையர், உ.வே. (2013), சிலப்பதிகாரமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், பன்னிரண்டாம் பதிப்பு, சென்னை: டாக்டர் உ.வே. சாமிநாதரையர் நூல் நிலையம்
2. சுந்தரசண்முகனார், முனைவர் (1992), சிலம்போ சிலம்பு, சென்னை: வானதிபதிப்பகம்
3. மேகராசா, த.இ (2015), சிலப்பதிகாரப் பாத்திரங்களும் கண்ணகிவழக்குரைப் பாத்திரங்களும், மட்டக்களப்பு: பட்டிப்பளைப் பிரதே கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம்
4. https://americanhumanist.org/what-is-humanism/definition-of-humanism/